**சாட்சிகளின் வாக்குமூலம்.**

பாகம் III சற்றறிக்கை உத்தரவு 2 ( I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.

**அசல் வழக்கு எண்.9/2022**

| | | | |
|---|---|---|---|
| வாக்குமூலம் - | வா.சா.1 | தொடங்கும் நேரம் : | 3.28 p.m. |
| | | முடிவுறும் நேரம் : | 3.44 p.m. |
| பெயர் | : குப்பன் | மதம் | : |
| த/பெ. | : இரத்தினம் | தொழில் | : |
| கிராமம் | : சாலவேடு | வயது | : |
| தாலுக்கா | : | நாள் | : **06-08-2025** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் **06**ஆம் நாள் சாட்சியம்.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ஆம் வாதியாவேன். எனது முதல் விசாரணைக்காக முதன்மை சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **17.05.1994** | **தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.1.** |
| **02.** | **10.01.2018** | **தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.2.** |
| **03.** | **08.10.2019** | **தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் - கணிணி நகல்.** | **வா.த.சா.ஆ.3.** |
| **04.** | **07.10.2019** | **தேதியிட்ட சிட்டா. (பட்டா எண்.555) - கணிணி நகல்.** | **வா.த.சா.ஆ.4.** |
| **05.** | **10.10.2019** | **தேதியிட்ட பட்டா. (பட்டா எண்.555) - கணிணி நகல்.** | **வா.த.சா.ஆ.5.** |
| **06.** | **30.11.2020** | **தேதியிட்ட சிறு/குறு விவசாயி சான்றிதழ் - கணிணி நகல்.** | **வா.த.சா.ஆ.6.** |

| | | | |
|---|---|---|---|
| **07.** | **03.02.2014** | **தேதியிட்ட 1ஆம் வாதி பெயரில் உள்ள வரி ரசீது. - அசல்.** | **வா.த.சா.ஆ.7.** |
| **08.** | **10.07.2019** | **தேதியிட்ட தாவா சொத்து சம்பந்தமாக அ பதிவேடு - கணிணி நகல்.** | **வா.த.சா.ஆ.8.** |
| **09.** | **28.10.2020** | **தேதியிட்ட 1ஆம் வாதி பெயரில் உள்ள சிட்டா. (பட்டா எண்.555) - கணிணி நகல்.** | **வா.த.சா.ஆ.9.** |
| **10.** | **29.09.2021** | **தேதியிட்ட சிட்டா ( பட்டா எண்.1611) - கணிணி நகல்.** | **வா.த.சா.ஆ.10.** |
| **11.** | **27.06.2018** | **தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.11** |
| **12.** | **10.01.2018** | **தேதியிட்ட 1ஆம் வாதி 2ஆம் வாதிக்கு பட்டா மாற்றம் செய்துக்கொள்ள ஆட்சேபனை இல்லை என்று அளித்த ஒப்புதல் வாக்குமூலம் - அசல். (1,2 பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் ஆட்சேபனை மற்றும் நிரூபணத்திற்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)** | **வா.த.சா.ஆ.12** |

மேற்படி **வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.12** வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. தாவாப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக்கொள்கிறேன்.
**(வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையான ஆவணங்கள் 1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்கும் நிரூபணத்திற்கும் உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)**
**1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.